# ஐ.தே.க.பிளவுறும் நிலையில்; 'டி.பி.'க்கு ஆபத்து?

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
4-4-1994
யாழ்ப்பாணம்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 22 இதழ் 53
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 4-4-1994

## ரணில் ஜனாதிபதி வேட்பாளர்?

(லண்டன்)

தென்மாகாண சபையில் ஏற்பட்ட பின்னடைவினாலேயே ஐ. தே. கவில் இன்று வெளிப்படையாகத் தென்படும் பிளவு நிலைக்கு காரணமென பி.பி.ஸி சிங்கள சேவை பொறுப்பாளர் திரு. எஸ். வசந்தராஜா பி.பி.ஸி. தெற்காசிய ஒலிபரப்பிற்கு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; தேர்தலின் பின் ஜனாதிபதியை வெளிப்படையாகவே பலர் குற்றம் சாட்டியும் விமர்சித்தும் வருகிறார்கள். குறிப்பாக வடபகுதியில் நடைபெறும் யுத்தம் குறித்து

(2-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் கூரேயை நீக்க டி.பி. முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் பதவியில் இருந்தும், அமைச்சரவையில் இருந்தும், கட்சி நிர்வாகத்தில் இருந்தும் திரு. சிறிசேன கூரேயை அகற்றுவதற்கு ஜனாதிபதி விஜேதுங்க தீவிரமாக ஆலோசித்து வருகின்றார்.

இதற்காக அவர் சேமினி திசநாயக்காவின் உதவியை நாடியுள்ளதுடன், இவருக்கு அமைச்சரவையில் முக்கிய பதவி வழங்கவும் முடிவு செய்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

### கல்வித்துறைச் சேவைக்காக

# பேராசிரியர் துரைராசாவுக்கு விருது வழங்கி 'பிரபா' கௌரவம்

## பாராட்டுரையும் நிகழ்த்தினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவின் அளப்பரிய சேவையைப் பாராட்டி தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் பேராசிரியருக்குப் பிரிவுபசாரம் ஒன்றை வைத்துத் தேசப்பற்றுடன் செயற்பட்டுக் கல்வித்துறையின் மேம்பாட்டிற்கு அவர் ஆற்றிய அரும் பணியைப் பாராட்டி விசேட விருது வழங்கிக் கௌரவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## இல. இனப்பிரச்னைத் தீர்வுக்கு பிரிட்டன் உதவ வேண்டும்

(லண்டன்)

இலங்கையின் உள்நாட்டுப் போருக்கு பேச்சுவார்த்தை மூலமான இணக்கத் தீர்வு வேண்டும் என பிரிட்டன் ஒன்றைக்கொண்டதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் தனது நல்லெண்ணங்களைப் பயன்படுத்த லூஸியன் நரமேபரசன திரு. இலங்கையின் பிரிட்டிஷ் அரசை கேட்டுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## தொண்டாவை சமரசம் செய்ய ஜே. ஆர். சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமானுடன் சமரசம் செய்யும் முயற்சியில் முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் ஐ. தே. க. முக்கிய உறுப்பினர்கள் பலரும் ஈடுபட்டுள்ளனர். இக் குழுவினர் திரு. தொண்டமானைச் சந்தித்துப் பேசியுள்ளனர். ஜனாதிபதி விஜேதுங்க நாட்டில்

(4-ம் பக்கம் பார்க்க)

## முன்னாள் பிரிகேடியர் மீது ராணுவநீதிமன்றில்விசாரணை

(கொழும்பு)

ஓய்வுபெற்ற இராணுவ பிரிகேடியர் தயா விஜயசேகர இராணுவ நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்பட வுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவர் சேவையில் இருந்தபோது தடைசெய்யப்பட்ட பொருட்களை வடபகுதிக்கு எடுத்துச் செல்ல வழிவகை

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம் வராத பயணம் முற்றுப்பெறாததொன்றாகும்

— கோபால் சுவாமிநாதன்

(யாழ்ப்பாணம்)

எனது இலங்கை விஜயம் யாழ்ப்பாணம் வராது மட்டக்களப்பு, மலையகம், கொழும்பு ஆகிய இடங்களோடு முற்றுப் பெற்றுள், முழுமை பெறாத ஒன்று என்ற உணர்வோடு வந்துவிடுவேன். காரணத்தினாலும் முக்கியமாக யாழ்ப்பாண மக்களின் கருத்துக்களை அறியவுமே இங்கு

இவ்வாறு நேற்று யாழ்ப்பாணம் வந்த பிரபல நாடக

(4-ம் பக்கம் பார்க்க)

## படை நடவடிக்கையில் தளர்வு ஏற்படலாம்

(கொழும்பு)

ஆளும் ஐ. தே. க. வினுள் எழுந்துள்ள தலைமைத்துவப் போட்டியினால் வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்படலாம் என்று கூறப்படுகிறது.

இப்போட்டியில் விஜேதுங்க வெற்றிபெற்றால் இரா

(4-ம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. வில் ஹேமாவுக்கு விரைவில் முக்கிய பதவி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் மனைவி திருமதி ஹேமா பிரேமதாசவும், அவரது மகனும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னணிக்குக் கொண்டுவரும் சாத்தியங்கள் காணப்படுவதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது

(கொழும்பு)

நாட்டில் திருமதி சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணியின் பலம் அதிகரித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சிகள் பல இடங்களிலும் கூட்டங்களை நடத்தி வருவதாகவும், இவற்றில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்வதுடன், ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரா

(4-ம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி சபைகள் இன்று முதல் இயங்கும்

(கொழும்பு)

கிழக்கிலும், வவுனியாவிலும் உள்ளூராட்சி சபைகள் இன்று முதல் செயற்படவுள்ளது. மேற்படி சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட 404 பேர் இன்று பதவி ஏற்கவுள்ளனர்.

மட்டக்களப்பு மாநகரசபை, வவுனியா, திருகோணமலை, அம்பாறை நகர சபைகள்

(4-ம் பக்கம் பார்க்க)

## அகதி முகாமில் தீ 183வீடுகள் தீக்கிரை

### ஒருவர் உயிரிழப்பு

(புத்தளம்)

புத்தளம் - மன்னார் வீதியில் உள்ள அகதிமுகாமில் இடம்பெற்ற தீ விபத்தின் காரணமாக ஒருவர் கொல்லப்பட்டார். அங்குள்ள 186 தற்காலிக வீடுகளில் 183 வீடுகள் தீக்கிரையாகியுள்ளன.

ஏழத்தாழ 1200 அகதிகள் அங்கு வாழ்ந்து வருகின்றனர். குடிசை ஒன்றிலிருந்த நெருப்பின் காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர்.

-ந-கி

